**செய்தி வெளியீடு எண்: 254** **நாள்: 13.04.2019**

# செய்தி வெளியீடு

இன்று(13.04.2019) தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் பணிகள் தொடர்பாக செய்தியாளர்களுக்கு அளித்த போட்டியில் கூறியதாவது:-

தமிழகத்தில் தேர்தல் பணிக்காக 5874 மண்டல குழுக்கள்(Zonal Teams) அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவும் 10 முதல் 15 வரையிலான வாக்குச் சாவடிகளின் பணிகளை ஆய்வு மேற்கொண்டு கண்காணிக்கும்.

தமிழகத்தில் உள்ள மிகவும் பதற்றமான(Critcal) மற்றும் பதற்றமான(Vulnerable) வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 7,225. இவற்றில், மத்திய துணை இராணுவப்படை (Central Para Military Force - CPMF), நுண் பார்வையாளர்கள் (Micro Observers) நியமனம், கணினிகள் மூலம் கண்காணிப்பு வசதி (Web Camera) மற்றும் ஒளிப்பதிவு வசதிகள் போன்றவை செய்யப்படவுள்ளன.

தேர்தல் நடைபெறவிருப்பதை முன்னிட்டு, பறக்கும் படை(FS), நிலை கண்காணிப்புக் குழு(SST) மற்றும் காவல்துறையினர் ஆகியவற்றின் மூலம் நேற்று(12.04.2019) மட்டும் ரூ.1.18 கோடி ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக விருதுநகர் மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ. 59 லட்சமும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.20 லட்சமும் அடங்கும்.

இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ள ரொக்கப்பணம் ரூ.129.51 கோடியும், விலையுயர்ந்த உலோகங்கள் ரூ.284.67 கோடி மதிப்பிலும் (இதில் 991 கிலோ தங்கம், 611 கிலோ வெள்ளியின் மதிப்பும் அடங்கும்), மதுபான வகைகள் ரூ.34.80 இலட்சம் மதிப்பிலும், போதைப்பொருள் வகைகள் ரூ.37.34 இலட்சம் மதிப்பிலும், மடிக்கணினி, குக்கர், சேலை, துணி வகைகள் ரூ.7.81 கோடி மதிப்பிலும், சேர்த்து மொத்தம் ரூ.422.72 கோடி மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின்(Arms Deposited) எண்ணிக்கை 19,655. எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க உள்ள இளம் வாக்காளர்களின்(Young Voters) எண்ணிக்கை 12,12,550.

நேற்று (12.04.2019) மட்டும் வருமான வரித்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள ரொக்கப்பணத்தின் மதிப்பு ரூ.2,32,50,000. இதுவரை வருமான வரித்துறையினரால் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டுள்ள ரொக்கப்பணத்தின் மதிப்பு ரூ.40.10 கோடி.

ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மாதிரி வாக்குச் சாவடியும், பெண்கள் மட்டுமே வாக்களிக்கும் ஒரு வாக்குச்சாவடியும் அமைக்க அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், வசதிகள் இருப்பின் ஒன்றுக்கும் மேற்பட்ட மேற்கண்ட வாக்குச் சாவடிகள் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**